# 13 கெத்சமனி வேண்டுதலின் வல்லமை

**இயேசு பணிக்காக தன்னை அர்ப்பணித்தபோது அநேக சவால்களுக்கு முகம் கொடுத்த முறைகளை முன்னைய பாடங்களில் அறிந்தோம். அவர் வாழ்ந்த நாட்களில் சமுதாயத்தில் துன்பங்களுக்கு உள்ளானவர்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து, பாவத்திற்கு மன்னிப்பைப் பெற்று தருவதற்காக மிகவும் கொடூரமான துன்பத்திற்குள்ளாகி சிலுவையிலே தனது வாழ்வை தியாகம் செய்ய நேர்ந்தது.**

**தனது வாழ்வின் இறுதி சில நாட்களில் அந்தக் கொடூரமான சம்பவத்திற்கு முகம் கொடுப்பதற்காக இயேசு வேண்டுதலின் ஊடாக பொறுமையும் தைரியமும் பெற்றுக் கொண்ட முறையையும் அவர் எமது வாழ்க்கைக்கு கொண்டுவரும் முன்மாதிரியையும் வழிகாட்டுதலையும் ஆராய்ந்து பார்ப்பது இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.**

**லூக்கா :** 22-39-53

**லூக்கா 22 : 39 - 46**
**ஓலிவமலையில் இறைவேண்டல்**

முன்னைய பாடத்தில் நாம் ஆராய்ந்து பார்த்த இறுதி இரவு உணவின் பின் இயேசு வழமைபோல் தனது சீடர்களோடு ஒலிவ மலைக்கு வந்தார். இன்னும் சில நாட்களில் தன் வாழ்க்கைப் பயணத்தில் அனுபவிக்க நியமிக்கப்பட்டிருந்த சவாலை இயேசு அறிந்து இருந்தார் உண்மையான மனிதனாக வாழ்ந்த அவர் இதுவரையில் அறிந்திருந்தது பசி, தாகம், துன்பம், சந்தோசம் போன்று இப்போது மரண வேதனையையும் அனுபவித்தார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இயேசு இச் சந்தர்ப்பத்தில் எவ்வளவோ துன்பத்தை அனுபவித்திருப்பார்.



படம் 13:1-கெத்சமனி தோட்டத்தில் ஜெபம்.

இத்துன்பத்தை அவரிலிருந்து நீக்கிவிடுமாறு மிகவும் உருக்கமாய் இறை வேண்டல் செய்தார் எனவும் அவரின் வியர்வைத்துளிகள் இரத்தத் துளிகளாகத் தரையில் விழுந்ததாகவும் நாம் திருமறையில் வாசிக்கின்றோம்.

''என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்'' என்று இயேசு ஒலிவமலையில் செய்த மன்றாட்டின் மூலம் தாம் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை அறிந்திருந்த இயேசு, தனது சுயவிருப்பத்திற்கு அல்லாது கடவுளின் விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார். இந்த மன்றாட்டிற்கு இறை பதிலானது தேவதூதன் விண்ணகத்திலிருந்து தோன்றி அவரை வலுப்படுத்தினார் என்பதாகும்.

இயேசு இவ்வாறு ஒலிவமலையில் மன்றாடிய வேண்டுதலில் இறை விருப்பத்திற்கு கீழ்ப்படிந்து, துன்பப்படவும் அதன் மூலம் மரணத்தையும் விரும்பி ஏற்றுக்கொண்டார்.

இறை விருப்பத்திற்கு எதிராகச் செயற்படும் ஒருவர் துன்புறவேண்டும் என்பது அக்கால யூதசமுதாயத்தில் சாதரணமாக ஏற்றுக்கொண்ட ஒன்றாகும். ஆனால் இயேசு தனது துன்பங்கள் மரணத்தின் முலம் பிறரின் நன்மைக்காக இறை விருப்பத்திற்கு இணங்கிச் செயற்பட்டார். இறையரசை உரிமையாக்கி கொள்வதற்காக துன்புறுவது வரப்பிரசாதமாவதைப் போல் இறுதியில் வெற்றியாகும் எனவும் அவர் இதன் மூலம் தெளிவுபடுத்தினார். அதற்காக வழி காட்டுதலும் பெலனும் தைரியமும் இறைவேண்டுதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இயேசு வேண்டுதல் செய்தபின் எழும்பி சீடர்களிடம் வந்தபோது அவர்கள் சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு ''சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்'' எனக் கூறினார். இவ்வாறு அவர் மனவேதனையோடு தனது சீடர்களையும் வேண்டுதல் செய்வதற்கு தைரியத்தைக் கொடுத்தார். இயேசு இந்த சந்தர்ப்பத்திற்கு முகம் கொடுப்பதற்கு வேண்டுதலின் மூலம் பெலத்தையும் தைரியத்தையும் பெற்றுக்கொண்டது போல், எமது வாழ்விலும் இவ்வாறான சவால்களின் போது வேண்டுதலின் மூலம் அதற்கான வழிகாட்டுதலையும் பெற்றுக்கொள்ளலாம். இயேசுவைப் பிடிப்பதற்கு முன்னால் சீடர்களுக்குக் கொடுத்த இறுதி வேண்டுகோளானது சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து வேண்டுங்கள் என்பதாகும்.

**லூக்கா : 22:47-53**

**இயேசுவைக் காட்டிக் கொடுத்தல்**

பன்னிருவரில் ஒருவர் தன்னைக்காட்டிக் கொடுப்பான் என்பதை இறுதி இரா உணவின்போது இயேசு அறிவித்தார். அந்த இடத்தில் இருந்தோரில் இயேசுவைப் பிரித்துக் காட்டிக் கொடுப்பதற்காக யூதாஸ் முத்தமிடுவதற்காக இயேசுவின் அருகில் வந்தார். யூத சமுதாயத்தில் ஒருவரை மரியாதையோடு வரவேற்பதற்கு முத்தமிடுவது சம்பிரதாயமாக இருந்தது. ஆனால் இந்த முத்தமானது காட்டிக்கொடுப்பதின் அடையாளமாக இயேசு அறிந்து இருந்தார். இச்சந்தர்ப்பத்தில் இயேசு யூதாசுக்கு கூறிய வார்த்தை குற்றச்சாட்டு அல்ல, மாறாக சோகத்தின் வெளிப்பாடாகும். அவர் காண்பித்த இரக்கம்  இயேசு பாவியையல்ல பாவத்தை நிராகரித்தார் என்பதை வெளிப்படுத்துகின்றது. பாவியை நிராகரிப்பது அவரின் நோக்கம் அல்ல.

இயேசுவின் சீடர்களில் ஒருவர் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி காதைத் துண்டித்தபோது இவ்வாறு செய்ய வேண்டாமென சீடர்களுக்கு கட்டளையிட்டு அவனை நலமாக்கினார். அவரைப் பிடிப்பதற்கு யூதாசோடு வந்திருந்த தலைமைக் குருக்களையும் அவர்களோடு இருந்தவர்களையும் பார்த்து இயேசு பயமில்லாமல் கேள்வி கேட்கும் அளவிற்கு தைரியம் இருந்தது.

இவ்வாறு செயல்படுவதற்கு இயேசுவுக்கு தைரியம் கிடைத்தது, அவர் கெத்சமனி தோட்டத்தில் நிகழ்த்திய முக்கிய வேண்டுதலினாலாகும். முதலாவதாக இறைவிருப்பத்திற்கு கீழ்ப்படிந்தார். கிறிஸ்தவ வாழ்வுக்கு இறை வேண்டுதலின் மூலம் உறுதியான பெலனும் முக்கியத்துவமும் பெறலாம் என்பதை தெளிவு படுத்தினார்.

### செயற்பாடு

''பாவத்திற்காக பாவியை வெறுக்கிறார் என்பது இயேசுவின் செயற்பாடல்ல'' இயேசு தனது வாழ்வின் இறுதி நாட்களில் இதனை செயற்படுத்திய முறைகளை உதாரணங்களோடு விளக்குக.